# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 13 **இலக்கியத்தொகுப்பு பகுதி III** தரம் 11

## மூத்தம்மா சிறுகதை

**01. மூத்தம்மா சிறுகதையை அடிப்படையாக வைத்து**
அ. மூத்தம்மா சிறுகதையின் ஆசிரியர் யார்?
ஆ. மூத்தம்மா சிறுகதை இடம் பெற்றுள்ள சிறுகதைத் தொகுப்பு ?
இ. இவரது ஏனய படைப்புக்கள் 3 எழுதுக

02. **மாஞ்சோனா மரத்தில் பக்குல் கத்தியது..**
அ. மாஞ்சோனா என்பதன் திருத்திய வடிவம் யாது?
ஆ. பக்குல் என்பது குறிக்கும் பொருள்?

**03. " இப்ப, ஏலா மென நேரம் பெய்ட்டு, நாளராவக்கி சொல்ரன் வா படுப்பம்...**
அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. மனெ என்பதன் எழுத்து வடிவம் யாது?

**04. " மழ வெய்யில்ல நனயாம அவவ கொண்டு போகணும்...**
அ. இங்கு அவவ எனக் குறிப்பது யாரை?
ஆ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

**05. " கைராசிக்காரி நீங்கள் தான் மாமி, என்ர தலப்புள்ளய ஏந்தனும்..**
அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. தலப்புள்ள என்பதன் பொருள்?

**06. " இஞ்சால வா மகன் மையத்த தூக்கப் போறாக...**
அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. மையத்து என்பதன் கருத்து யாது?

**07. " எனது சிரசில் செந்தர்ய கீரிடம் சூடியதான மிதப்பு...**
அ. சிரசு என்பதன் கருத்து?
ஆ. சௌந்தர்யம் என்பது குறிப்பது?

**08. என் வெள்ளைக் கொக்கு உறங்கிக் கொண்டிருந்தது சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசினார்..**
அ. இவ்வடிகளில் பயின்று வந்துள்ள அணி யாது?
ஆ. இவ்வடிகளில் நோயைக் குணமாக்கும் செயலாக காட்டப்படுவது?

**09. இது எப்பிரதேசத்தை, எச்சமூகத்தை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டது.**

**10. இதில் இடம்பெறும் கதாப்பாத்திரங்கள் எவை?**

**11. இக்கதையை படிக்கும் போது ஏற்படும் உணர்வு யாது?**

12மூத்தம்மாவின் குணப்பண்புகள் அல்லது பாத்திர வார்ப்பு பற்றி எடுத்துக்காட்டுக.

13. பேரன் காசீமின் குணப்பண்புகளை எடுத்துக்காட்டுக

14. இச்சிறுகதையில் மண்வாசனைவெளிப்படும் விதத்தினை எடுத்துக்காட்டுக.

15 மூத்தம்மாவின் தோற்றப் பொலிவு எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுளளது.

16. மூத்தவாப்பா வின் பாத்திர படைப்பு பற்றி கூறுக.

17. இச் சிறுகதையில் வெளிப்படும் மூட நம்பிக்கைகள் அல்லது மூடப்பழக்கவழக்கங்கள் பற்றி தெளிவுறுத்துக?

18. மூத்தம்மாவின் மரணத்தை முன்கூட்டியே அறிவிக்கும் வகையில் கதாசிரியர் கையாண்ட யுக்திகள் யாது?

19. சிறுகதை ஆசிரியரின் மொழிநடைச் சிறப்புக்கள் பற்றி விளக்குக.

20. இச் சிறுகதையில் வெளிப்படும் இயற்கை வர்ணனைக் கதைக்கள வர்ணனை காட்சிகளை குறிப்பிடுக?